உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
மாற்றத்தின் ஆரம்பம்
www.dhinatamil.com
dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 12.06.2026 • மலர் 04 • இதழ்: 163 • வெள்ளிக்கிழமை • Edition : Nagercoil • 12.06.2026 • Vol : 04 • Issue : 163 • Page : 4 • Rs. 5/-

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

# 'நாட்டின் வளர்ச்சிக்கு ஒன்று சேர்ந்து உழைப்போம்'

## நிதி ஆயோக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேச்சு




புதுடெல்லி, ஜூன் 12

நிதி ஆயோக் கவுன்சிலின் 11வது கூட்டம் டெல்லி ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் உள்ள கலாசார மையத்தில் இன்று (வியாழக்கிழமை) காலை தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த கூட்டத்துக்கு பிரதமர் மோடி தலைமை தாங்கினார்.

இந்த உயர்மட்டக் கூட்டத்தில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முதல் மந்திரிகள், யூனியன் பிரதேசங்களின் துணை நிலை கவர்னர்கள் மற்றும் நிர்வாகிகள், பதவிவழி உறுப்பினர்களாகப் பணியாற்றும் மத்திய மந்திரிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்துகொண்டனர். நிதி ஆயோக்கின் துணைத்தலைவர், உறுப்பினர்கள் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ஆகியோரும் உடனிருந்தனர்.

மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா மற்றும் பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வு தொடர்பாக தனது எக்ஸ் வலைதளத்தில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது:

நிதி ஆயோக்கின் ஆளும் குழுவின் 11வது கூட்டத்திற்குத்தலைமை தாங்குகிறேன். கூட்டுறவு கூட்டாட்சித் தத்துவத்தின் வழிகாட்டுதலுடன், இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தை விரைவுபடுத்த நாம் ஒன்றிணைந்து செயல்படுகிறோம். வளர்ச்சி அடைந்த இந்தியா என்கிற நமது பொதுவான தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதில், மத்திய மற்றும் மாநிலஅரசுகளின்கூட்டு முயற்சிகள் முக்கியப் பங்காற்றும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, இந்தக் கூட்டத்தில், அடிப்படை மனித மூலதனத்தையும் எதிர்காலத்திற்குத் தயாரான திறன்களையும் வளர்த்தல், பரவலாக்கப்பட்ட வளர்ச்சி மூலம் ஆக்கப்பூர்வமான வேலை வாய்ப்பு மற்றும் தொழில்முனைவை ஊக்குவித்தல், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து விளைவுகளை மேம்படுத்துதல், மற்றும் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சமத்துவத்தையும் கண்ணியத்தையும் உறுதி செய்தல் ஆகிய நான்கு முக்கியத் தூண்களை மையமாகக் கொண்ட "அனைவரையும் உள்ளடக்கிய மனித மேம்பாட்டுக் கட்டமைப்பு" குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொழில்முனைவை ஊக்குவிப்பது, திறன்மேம்பாட்டு முயற்சிகளை வலுப்படுத்துவது மற்றும் நாடு முழுவதும் நிலையான வேலைவாய்ப்புகளை உருவாக்குவது ஆகியவற்றுக்கான வழிகள் குறித்தும் இந்தக் குழு விவாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கூடுதலாக, டிசம்பர் 26 முதல் 28, 2025 வரை நடைபெற்ற ஐந்தாவது தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாட்டில் இருந்து வெளிவந்த பரிந்துரைகளையும் உறுப்பினர்கள் ஆய்வு செய்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பெண் அதிரடிப் படைக்கான முதல் வழக்கே ஆளுங்கட்சி வழக்கா? எடப்பாடி பழனிசாமி விமர்சனம்



சென்னை, ஜூன் 12

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் பகுதியில் இன்றைய முதலமைச்சரின் ரசிகையான பெண் ஒருவர் ஆளுங்கட்சி தவெக நிர்வாகிகளால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாக வரும் செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. ஸ்ரீவைகுண்டம் தவெக எம்.எல்.ஏ. சரவணன் ஆதரவில் ,இந்த கொடூரத்தை ஆளுங்கட்சியைச் சேர்ந்த இருவர் அரங்கேற்றியுள்ளதாக தெரிகிறது.

மேலும், இதனை மறைக்க, தவெக எம்.எல்.ஏ. சரவணனே அந்த பெண்ணிடம் "அமைச்சரிடம் பேசி வேலை வாங்கித்தருவதாக" சமரசம் பேசியதாக செய்திகள் வருகிறது. சிங்கப்பெண் அதிரடிப் படைக்கான முதல் வழக்கே ஆளுங்கட்சி வழக்கா? அதுவும், ஒரு ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. இப்படி கேடுகெட்டத்தனமான செயலுக்கு சமரசம் பேசுவதை இன்றைய முதல்வர் ஏற்றுக்கொள்கிறாரா?

உங்களை திரையில் ரசித்து வளர்ந்த பெண்ணுக்கு, உங்கள் ஆட்சியில், உங்கள் கட்சியினரால் நடைபெற்றுள்ள இந்த கொடுமைக்கு பதில் சொல்ல வேண்டிய கடமை உங்களுக்கு உள்ளதை உணர்கிறீர்களா? "அமைச்சருக்கு தெரியும்; மேலிடத்திற்கு தெரியும்" என்றெல்லாம் தெனாவட்டு பேச்சுகள் வருகிறது என்றால், அப்படி என்ன மேலிடம்? யார் அது? முதல்வரா? அல்லது, முதல்வரைத் தாண்டிய ஏதேனும் பவர் சென்ட்டரா?

சிங்கப்பெண் அதிரடிப் படை துவக்க விழாவில் சிங்கிள் டேக்கில் பேசிய வசனங்களை எல்லாம் உங்கள் கட்சியினரைப் பார்த்து பேசுங்கள். பாலியல் வன்கொடுமைக்கு வக்காலத்து வாங்கி சமரசம் பேசி மறைக்க முயன்ற உங்கள் கட்சி எம்.எல்.ஏ.வை பதவி ராஜினாமா செய்ய வைத்து கைது செய்ய இன்றைய முதல்வருக்கு தெம்பு, திராணி இருக்கிறதா?

மேலும், வேறொரு பெண்ணுக்கும் இக்கொடுமை நடந்துள்ளதாக பாதிக்கப்பட்ட பெண் கூறியுள்ளதாக செய்திகள் வருகின்றன. அதனால், இந்த வழக்கை எந்த அரசியல் இடையூருக்கும் இடமின்றி விசாரித்து, குற்றம் இழைத்தவர்கள் மீதும், குற்றத்திற்கு துணை போனோர் அனைவர் மீதும், அது யாராக இருந்தாலும் சரி, எந்த எம்.எல்.ஏ.வாக, அமைச்சராக இருந்தாலும் சரி, கைது செய்து கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என இன்றைய பொய்க்கால் குதிரை அரசை வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## த.வெ.க.வில் பேனர் கலாச்சாரம் இருக்க கூடாது

### கட்சியினருக்கு புஸ்சி ஆனந்த் அறிவுரை



சென்னை, ஜூன் 12

தமிழக முதல்அமைச்சரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜயின் பிறந்தநாள் வருகிற ஜூன் 22ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. முதல்அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு வரும் முதல் பிறந்தநாள் என்பதால், அதை சிறப்பாகக் கொண்டாட த.வெ.க. நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர் இதுதொடர்பாக, கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான என். ஆனந்த் தலைமையில், எம்.எல்.ஏ.க்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை பனையூரில் உள்ள கட்சித் தலைமையகத்தில் இன்று நடைபெற்றது

கூட்டத்தில் பேசிய அமைச்சர் என். ஆனந்த், விஜயின் பிறந்தநாளை ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல் மற்றும் அன்னதானம் வழங்குதல் போன்ற சமூகநலப் பணிகள் மூலம் கொண்டாட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மேலும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் எந்த நிகழ்வும் நடத்தக் கூடாது என்றும், விஜய்யின் அறிவுறுத்தலின்படி பேனர்கள் மற்றும் கட்அவுட்கள் வைப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்என்றும்அவர்தெரிவித்தார்.த.வெ.க.வில் பேனர் கலாசாரத்திற்கு இடமில்லை என்பதையும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

## கூடங்குளம் மக்களை இன்னும் எத்தனை காலம் குற்றவாளிகளாக நடத்தப் போகிறீர்கள்? வேல்முருகன்



சென்னை, ஜூன் 12

தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

கூடங்குளம் பகுதியில் வாழும் மீனவர்கள், தொழிலாளர்கள், பெண்கள், இளைஞர்கள் எனப் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களது மண்ணின் பாதுகாப்பிற்காகவும், எதிர்காலத் தலைமுறையினரின் நலனுக்காகவும் முன்னெடுத்த மக்கள் எழுச்சியின் காயங்கள் இன்னும் ஆறாமல் இருக்கின்றன.

ஒரு போராட்டம் முடிந்திருக்கலாம். ஆனால் அந்தப் போராட்டத்தில் பங்கேற்ற மக்களின் வாழ்க்கையைத் துரத்திக்கொண்டிருக்கும் துன்பங்கள் முடிவடையவில்லை.

ஆண்டுகள் பல கடந்த பின்னரும், நூற்றுக்கணக்கான குடும்பங்களின் மேல் சட்டச் சுமைகள் தொடர்ந்து துரத்திக் கொண்டிருக்கின்றன

வேலை வாய்ப்புகள் பறிபோயுள்ளன. வெளிநாடுகளுக்குச் சென்று வாழ்வாதாரம் தேடுவதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டுள்ளன. குடும்பங்களின் பொருளாதாரம் சிதைந்துள்ளது. மனவேதனையும், எதிர்காலம் குறித்த அச்சமும் இன்னும் அகலவில்லை.

ஒரு சனநாயக நாட்டில் மக்களின் குரல் ஒலிப்பது குற்றமல்ல. தங்கள் வாழ்வுரிமையைப் பாதுகாக்கக் குரல் கொடுத்தவர்கள் சமூக விரோதிகளும் அல்ல. ஆனால் அவர்கள் மீது சுமத்தப்பட்ட வழக்குகள், காலம் கடந்தும் நீடிப்பது நீதியின் மீதான நம்பிக்கையையே சோதனைக்கு உட்படுத்துகிறது.

சட்டமன்றத் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படாத நிலையில், கூடங்குளம் மக்கள் ஏமாற்றத்துடனும் ஏக்கத்துடனும் காத்திருக்கின்றனர். சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், தற்போது எஞ்சியுள்ள 46 க்கும் மேற்பட்ட வழக்குகள், பல குடும்பங்களின் நிம்மதியைப் பறித்துக்கொண்டே இருக்கின்றன.

இந்த வழக்குகளை முடிவுக்கு கொண்டு வருவதில் என்ன தடைகள் உள்ளன?

மத்திய அரசின் அழுத்தங்களா? அல்லது வேறு நிர்வாகச் சிக்கல்களா? என்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.

எனவே, கூடங்குளம் மக்களின் நீண்டகால துயரத்திற்கும் மனவேதனைக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், தோழர் சுப. உதயகுமாரன் உள்ளிட்ட போராட்டத்தில் பங்கேற்ற பொதுமக்கள் மீது எஞ்சியுள்ள, அனைத்து வழக்குகளையும் மனிதநேய அடிப்படையில் தமிழக அரசு உடனடியாகத் திரும்பப் பெற முன்வர வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்டிக்கர் ஒட்டி தான்... தவெக அரசு மீது கீதா ஜீவன் விமர்சனம்

தூத்துக்குடி, ஜூன் 12

தூத்துக்குடியில்திமுக முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

தனி மனித ஒழுக்கம்தான் சமூக ஒழுக்கம் என எல்லாருக்கும் தெரியும்.அதை சொல்லிவிட்டு, பொறுப்பில் இருந்து கைநழுவ பார்க்கிறாரா முதல்அமைச்சர் ? உங்கள் கட்சிகாரர்களுக்கே கிடைக்காத நீதி.ஒட்டுமொத்த தமிழக பெண்களுக்கு எப்படி நீதி வழங்கப் போகிறீர்கள்? பெரிய கண்டுபிடிப்பு.

சென்னையில் நடந்த சிறுமி வன்கொடுமை, ஸ்ரீவைகுண்டத்தில் நடந்த பிரச்சொனை ஆகியவற்றில் தவெக கட்சியினர் ஈடுபட்டுள்ள நிலையில் நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் எங்களுடைய கேள்வி. உங்களுடைய கட்சியினரை அழைத்து நடவடிக்கை எடுங்கள்.

மு.க. ஸ்டாலின் முதல்அமைச்சராக இருந்தபோது எல்லாவற்றிற்கும் 'சிஎம் சார்' தான் பொறுப்பு என்று கூறினீர்களே. இப்போது விஜய் முதல்அமைச்சரான உடன் 'தனிமனித ஒழுக்கம் தான் சமூக ஒழுக்கம்' என்று சொல்கிறீர்கள். அப்போது இருந்த சிஎம் சாருக்கு மட்டும் சமூக ஒழுக்கம் என்று சொல்லத் தெரிகிறதா? அப்படி என்றால் நீங்கள் வசனம் பேசவில்லையா, புரிந்து பேசுகிறீர்களா என்று கேள்வி எழுப்புகிறேன்.

சிங்கப்பெண் அதிரடிப்படை தொடக்க விழா என்பது ஒரு ஆடியோ லான்ச் போல இருந்தது. எப்படி எல்லா பிரச்சார பயணமும் ஒரு சினிமா ஒத்திகை பார்த்தது போல் இருந்ததோ, அதேபோல் இது ஆடியோ லான்ச் போன்று ஒரு நிகழ்ச்சியாக நடந்தது. அதற்கு பெரிய அளவில் ப்ரோமோஷன் செய்யப்பட்டது.

ஒரு குழந்தை பெறுவதற்கே 10 மாதம் ஆகும். ஆட்சி மாறியவுடன் எல்லாம் 'நாங்கள் தான், நாங்கள் தான்' என்று சமூக ஊடகங்களில் பொய் செய்தியை ப்ரோமோட் செய்கின்றார்கள். இனி மக்கள் எல்லோரும் வரும் செய்திகள் உண்மையா என்பதை ஆய்வு செய்து, அதன் உண்மைத் தன்மையை புரிந்துகொள்ள வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.உதாரணமாக, தூத்துக்குடியில் நான் அமைச்சராக இருந்தபோது 850 சிசிடிவி கேமராக்கள் வைக்கப்பட்டன. இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன்மறுநாளே'எங்கள்முதல்அமைச்சர் சிசிடிவி கேமராக்கள் வைத்து விட்டார்' என்று ஒரு செய்தி சமூக வலைதளங்களில் பரவுகிறது.

அதேபோல், நமது பகுதியில் மாணவர்களுக்காக ஏசி பஸ் ஸ்டாப் எனது சட்டமன்ற நிதியில் வைத்தோம். ஆனால் அதை தற்போது 'மாணவர்களுக்காக ஒரு ஏசி பஸ் ஸ்டாப் வைத்து விட்டோம்' என்று சமூக வலைதளங்களில் பரப்புகின்றனர். திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட பிங்க் பேட்ரோல் என்ற திட்டத்தை பெயர் மாற்றம் செய்து ஸ்டிக்கர் ஒட்டி சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை என்று தொடங்கியுள்ளார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## கல்வி அளித்து குழந்தைகளின் வாழ்வை ஒளிரச் செய்வோம்: முதல்அமைச்சர் விஜய்

சென்னை, ஜூன் 12

தமிழக முதல்அமைச்சர் விஜய் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக உலகெங்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஜூன் 12ஆம் நாள் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

துள்ளித் திரிந்து விளையாடி, பள்ளிக்குச் சென்று கல்வி பயிலும் இனிய பருவமே குழந்தைப் பருவமாகும். இப்பருவத்தில், பல்வேறு குடும்பச் சூழ்நிலைகளால் வேலைக்குச் செல்கின்ற குழந்தைகளை, அக்கொடுமையிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு இனிமையான குழந்தைப் பருவத்தினையும், முறையான கல்வியினையும் வழங்கிட வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

ஒவ்வொரு குழந்தைக்கும், சுதந்திரமாக வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை மற்றும் கல்வி உரிமை போன்றவை அவசியமானதாகும். இவற்றை வழங்க மறுப்பது இயற்கை நியதிக்கும், சமூக நீதிக்கும் எதிரானதாகும். குழந்தைகளின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு எதிராக எவ்வகையான தொழில்களிலும் குழந்தைகளைப் பணியமர்த்தக் கூடாது மற்றும் வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களில் பணியமர்த்தக் கூடாது.

குழந்தைகளைத் தொழிற்பணிகளில் ஈடுபடுத்தாமல் அவர்களுக்கான உரிமைகளைப் பேணிக்காத்து, முறையான கல்வி அளித்து, மகிழ்ச்சியான குழந்தைப் பருவத்தை அவர்கள் பெறுவதை உறுதி செய்வதுடன் வளமான எதிர்காலத்தை உருவாக்குவதையே தமிழ்நாடு அரசு தனது முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதனடிப்படையில், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்திட தமிழ்நாடு அரசு பல்வேறு முனைப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

குழந்தைத் தொழிலாளர்கள் உழைப்பின் மூலம் பெறப்படும் வருமானம் வீட்டிற்கும், நாட்டிற்கும் சிறுமை என்பதை சமூகமும், பெற்றோர்களும் உணர்ந்து, குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழித்திட தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் முன்னெடுப்புகளுக்குத் துணை நின்று, குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடுவோம். குழந்தைத் தொழிலாளர் முறையைத் தகர்ப்போம்! கல்வி அளித்து குழந்தைகளின் வாழ்வை ஒளிரச் செய்வோம்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேம்பிரிட்ஜ் கல்வி முறையில்

# மாணவர்கள் கல்வி தரத்துடன் உடல்நலத்தையும் மேம்படுத்துவதே குறிக்கோள்

சென்னை ஜூன் 12

கல்வித் துறையில் வேகமாக வளர்ந்து வரும் உலகத்துக்கு ஏற்ப மாணவர்களைத் தயார் செய்வது குறித்து நவீன கல்வியை புகுத்தும் விதமாக கேம்பிரிட்ஜ் கல்வி முறையில் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியில், உடல் ஆரோக்கியம், துன்பங்களைத் தாங்கும் திறன், நம்பிக்கை, ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கான பழக்கங்கள் ஆகிய அத்தியாவசிய அம்சங்கங்களை அறிமுகபடுத்தி மாணவர்களின் தரத்தில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள்.

இதுகுறித்து பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பேசிய ஹோலி சாய் இன்டர்நேஷனல் பள்ளியின் முதல்வரும் கேம்பிரிட்ஜ் பள்ளிகளின் தமிழ்நாடு கூட்டமைப்பின்தலைவருமான டாக்டர் எஸ். பிரேம் சங்கர், முழுமையான மாணவனை உருவாக்குவதே கேம்பிரிட்ஜ் கல்விமுறையின் முக்கியமான நோக்கமாகும் .

கேம்பிரிட்ஜ் பாடத் திட்டத்தில் சமீபத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதில், மாணவர்களின் ஆரோக்கியம், கற்றல் திறன் மட்டுமல்லாது எதிர்காலத்துக்குத் தேவைப்படும்அடிப்படைத் திறன்கள், ஆகியவற்றைச் கற்றுத் தருவதற்கான முக்கியத்துவம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்தோடு தான், தமிழகத்தில் இருக்கும் கேம்பிரிட்ஜ்சர்வதேசபள்ளியான ஹோலி சாய் பள்ளி செயல்படுகிறது. அங்கே விளையாட்டு உள்ளிட்ட கல்விக்குஅப்பாற்பட்டதிறன்வளர்ப்பை விட, மாணவர்களின் உடல்நலனே அடிப்படை முக்கியத்துவம் பெறுகிறது. இந்த உடற்பயிற்சித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதில் இருந்து, மாணவர்கள் மத்தியில் நல்ல மாற்றங்கள் தெரியத் தொடங்கின. மாணவர்கள் உடற்பயிற்சியில் கவனம் செலுத்துவதோடு,உற்சாகமாகவும் கட்டுப்பாட்டுடனும் நம்பிக்கையுடனும் இருக்கின்றனர்.

ஆரோக்கியமான வாழ்க்கைக்கான பழக்கவழக்கங்கள் என்னென்ன என்பதை மாணவர்கள் தெரிந்துகொண்டதோடு, பெற்றோரும், தமது பிள்ளைகளின்கல்வி முன்னேற்றதோடு, ஒட்டுமொத்த ஆரோக்கியமும் பேணப்படுவதைக் கண்டு பாராட்டுகின்றனர் என்று தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் இதன்மூலம், வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொள்ளும் மனப்பாங்கு வளர்க்கப்படுவதோடு, விமர்சன சிந்தனை, படைப்பாளுமை, கூட்டுமுயற்சி, நிகழ்கால பிரச்னைகளை தீர்க்கும் திறன் ஆகியவையும் வளர்க்கப்படுகின்றன. பாடங்களில் மட்டும் மாணவர்களின் திறன் வளர்க்கப்படுவதில்லை. அதோடு, நம்பிக்கை, பொறுப்புணர்வு, சிந்தனை, புதுமை படைத்தல் உள்ளிட்ட பண்புகளும் வளர்க்கப்படுகின்றன. உலகத்தை எதிர்கொள்ள மாணவர்களுக்கு இத்தகைய திறன்கள் உதவுகின்றன," என்றார்.



## பேராவூரணி வட்டத்தில்

# 1435 ஆம் பசிலிக்கான வருவாய் தீர்வாயம் கலெக்டர், எம்எல்ஏ முன்னிலையில் குடிகள் மாநாடு

தஞ்சாவூர் ஜூன் 12

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி வட்டத்தில் 1435 ஆம் பசிலிக்கான வருவாய் தீர்வாயம் மாவட்ட கலெக்டர் ரேவதி, பேராவூரணி எம்எல்ஏ அசோக்குமார் முன்னிலையில் குடிகள் மாநாடு நடைபெற்றது

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாயம் , கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் பராமரிக்கும் கிராம கணக்கு பதிவேடுகளில் ஆய்வு செய்யப்பட்டது .அதனைத் தொடர்ந்து தீர்வாயத்தில் பேராவூரணி வட்டத்தைச்சார்ந்த பேராவூரணி உள் வட்டத்தில் வருவாய் கிராமமான பின்னவாசல் , ஆதனூர் ,நாட்டாணிக் கோட்டை, மணக்காடு ,நெல்லியடிக்காடு, சாணாக்கரை, பேராவூரணி பகுதி1, பேராவூரணி பகுதி 2, சொர்ணங் காடு பகுதிகளில் கூடுதல் வருவா ய் கிராமமான படப்பனார்வயல், முடப்புளிக்காடு1 பீட், வீரக்குடி ரெட்டவயல், உக்கடை, கொரட்டூர், முடப்புளிக்காடு2 பீட் , ஆண்டார் கோட்டை, ரெங்கநாயகிபுரம், சித்தாதிக்காடு, பனஞ்சேரி , வலப்பிரமன் காடுஆகிய பகுதிகளில் வருவாய் தீர்ப்பாயம் பசலி 1435 பொதுமக்களிடம் இருந்து வருவாய் துறை தொடர்பான 393கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட் டு விரைவில் தீர்வு காண நடவடிக் கை மேற்கொள்ள மாவட்ட கலெக்டர் ரேவதி அறிவுறுத்தினார்

இந்நிகழ்ச்சியில்மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்ததாவது

தஞ்சாவூர் மாவட்டத்தில் அனை த்து வட்டாட்சியர் அலுவலகங்களி லும், வருவாய் தீர்ப்பாயம் நடை பெற்று வருகிறது.அதன் அடிப்படை யில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது .மேலும் தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் கோடை காலத்தை முன்னிட்டு அனைத்து பகுதிகளிலும் சீரான அளவில் குடிநீர் வினியோகம் மேற்கொள்ளப் பட்டு வருகிறதாஎன்பதுகுறித்தும்,மழைக்காலத்தை முன்னிட்டு மேற் கொள்ள வேண்டிய முன்னெச்சரிக் கை நடவடிக்கைகள் குறித்து தொடர் ஆய்வு மேற்கொள்ளப் பட்டு வருகிறது

வருவாய் தீர்வாயம் மற்றும் குடிகள் மாநாட்டில் விவசாயிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய முறையில் விசாரணை மேற்கொண்டு, அனைவருக்கும் உரிய முறையில் பதில் அளிக்க நடவடிக் கை மேற்கொள்ளப்பட்டது என்று மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்

அதனைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி வட்டத்தில் 1435 ஆம் பசலிக்கான வருவாய் தீர்வாயத்தில் வருவாய் துறை சார்பில் குடிகள் மாநாடு தினத்தன்று 22 நபர்களுக்கு உடனடியாக தீர்வாக இணைய வழிபட்டாக்களையும், குடும்ப அட்டைகள் 4 எண்ணிக்கையும், 4 நபர்களுக்கு பட்டா மாற்றம் உட்பிரிவு ஆணைகளையும் நெற்பயிற் நுண்ணூட்டம் 2 நபர்க ளுக்கும் ஆக மொத்தம் 32 நபர்களு க்கு மாவட்ட கலெக்டர் ரேவதி பேராவூரணி எம்எல்ஏ அசோக்குமார்ஆகியோர்முன்னிலையில் வழங்கினார்கள்

இந்நிகழ்ச்சியின் போது உதவி கலெக்டர் (பயிற்சி) சுபாஷ் கார்த்திக், உதவி இயக்குனர் (நில அளவை) வேங்கட கிருஷ்ணன், பேராவூரணி வட்டாட்சியர் பாலசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்



தேனி மாவட்டம் கெங்குவார்பட்டி, காட்ரோடு பகுதியில் உள்ள இயக்குநர் இமயம் திரு. பாரதிராஜா அவர்களின் பண்ணை வீட்டில் இன்று (11.06.2026), உடல்நலக்குறைவால் காலமான இயக்குநர் இமயம் திரு.பாரதிராஜா அவர்களின் உடலுக்கு மாண்புமிகு எரிசக்தி மற்றும்சட்டத்துறைஅமைச்சர்ஆர்.நிர்மல்குமார்தமிழ்நாடுஅரசின்சார்பில்மலர்வளையம் வைத்துஅஞ்சலிசெலுத்தினார்.உடன்மாவட்டஆட்சித்தலைவர்மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., உள்பட பலர் உள்ளனர்.

## திருச்சிராப்பள்ளி

# துறையூர் யூனியன் அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டம்



திருச்சி, ஜூன் 12

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே வளியாம்பட்டி கிராமத்தில் 100 நாள் வேலைத்திட்ட பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.300 ஊதியம் ரூ.230 ஆக குறைக்கப்பட்டதை கண்டித்து, 100க்கும் மேற்பட்ட பணியாளர்கள் துறையூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை அடுத்து, அவர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.



## லால்குடி அருகே

# மின்வெட்டு நள்ளிரவில் பொதுமக்கள் சாலை மறியல்

திருச்சி, ஜூன் 12

லால்குடி அருகே மேலவாளாடி, கீழவாளாடி அப்பாதுரை கிராமங்களில் தொடர் மின்வெட்டு ஏற்பட்டுள்ளது.

நீண்ட நேரமின்நிறுத்தம் காரணமாக ஆத்திரமடைந்த பொதுமக்கள், திருச்சிசிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் நள்ளிரவு ஒரு மணி அளவில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.





# திருச்சி மனைவி கண் முன்னே உடல் நசுங்கி பலியான கணவன்

திருச்சி, ஜூன் 12

திருச்சி கரூர் தேசிய நெடுஞ்சாலையில் பெட்டவாய்த்தலை ஆஞ்சநேயர் கோவில் அருகே, இருசக்கர வாகனத்தில் சென்ற நபர் மீது பிக்கப் லோடு வேன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில், பசுபதி பாளையத்தைச் சேர்ந்த நபர் தனது மனைவி கண் முன்னே உடல் நசுங்கி இரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இது குறித்து பெட்டவாய்த்தலை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சி பைக்கில் இருந்து நிலை தடுமாறி விழுந்த முதியவர் பலி

திருச்சி, ஜூன் 12

திருச்சி சிறுகமணி பகுதியைச் சேர்ந்த 71 வயது முதியவர் நடராஜன், கடந்த ஒன்பதாம் தேதி ஜீயபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திண்டுக்கல் பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது நிலைதடுமாறி கீழே விழுந்து தலையில் பலத்த காயமடைந்தார். மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ஜீயபுரம் போலீசார் அவரது உடலை பிரேத பரிசோதனை செய்து உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

# திருச்சி சிறுமியுடன் உல்லாசம் போக்சோவில் வாலிபர் கைது

திருச்சி, ஜூன் 12

திருச்சி நாகமங்கலம் பகுதியைச் சேர்ந்த 20 வயது தாரை தப்பட்டை இசைக்கலைஞர் பூபதி, 14 வயது சிறுமியை ஆசைவார்த்தைகூறி முள்காட்டிற்கு அழைத்துச் சென்று பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. இது குறித்து சிறுமியின் பெற்றோர் கண்டோன்மெண்ட் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில், போலீசார் பூபதியை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



இராமநாதபுரம்மாவட்டம்முதுகுளத்தூர்தாலுகாஇளஞ்செம்பூர்அரசுஉயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்க்கு ஸ்கூல் பேக்ஸ்பிக் நிறுவனம் சார்பில் டீலர் ராஜமாணிக்கம் வழங்கினார்.




திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி ஜூன் 12 சிங்கப்பெண் அதிரடிப்படை காவல்துறையினர் வாணியம்பாடி பேருந்து நிலையம் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்



## தஞ்சாவூரில் சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ்

# 14 நபர்களுக்கு வீட்டுமனை இணைய வழி பட்டாக்களை மாவட்ட கலெக்டர் ரேவதி வழங்கினார்

### முரசொலி எம்பி,விஜய் சரவணன் எம் எல் ஏ முன்னிலை வகித்தனர்

தஞ்சாவூர் ஜூன் 12

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில்சிறப்பு வரன்முறையில் திட்டத்தின் கீழ் 14 நபர்களுக்கு வீட்டு மனை ஒப்படை க்கான இணைய வழிபட்டாக்களை மாவட்ட கலெக்டர் ரேவதிஅவர்கள்முரசொலிஎம்.பி,விஜய் சரவணன் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர்

தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் வட்டத்திற்குட்பட்ட 14 குடும்பத்தி னர்கள் பல வருடங்களாக பட்டா யின்றி வசித்து வந்தனர்.அதனைத் தொடர்ந்து தாங்கள் வாழ்ந்து வரும் இடத்திற்கு பட்டா வழங்க வேண் டும் என கோரிக்கை விடுத்தனர்.அந்த14குடும்பத்தினருக்கும் தலா 3சென்ட் வீதம் சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் வீட்டு மனை ஒப்படைக்கான இணைய வழி பட்டாக்களை மாவட்ட கலெக்டர் ரேவதி ,முரசொலி எம்பி, விஜய் சரவணன் எம்எல்ஏ ஆகியோர் முன்னிலையில் வழங்கினர்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன் வருவாய் கோட்டாட்சியர் நித்யா வட்டாட்சியர் சிவக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

## தருமபுரி மாவட்டத்தில்

# சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையை காவல் கண்காணிப்பாளர் துவக்கி வைத்தார்



தருமபுரி ஜூன் 12

தருமபுரி மாவட்டத்தில் சிங்கப்பெண் சிறப்புப்படைசெயல்பாட்டைமாவட்ட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன் துவக்கி வைத்தார். இது குறித்து சிங்கப் பெண் சிறப்புப் படையில் உள்ள சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணவேணி கூறியதாவது. சிங்கப்பெண் சிறப்புப்படை பணியை தொடங்கி உள்ளோம். இதற்காக எங்களுக்கு ஐந்து நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த படையில் 2 பெண் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர்கள், 4 பெண் காவலர்கள் மற்றும் 2 டிரைவர்கள் இடம்பெற்று இருக்கிறோம். காலை 7 மணி முதல் மதியம் 2 மணி வரையும், மதியம் 2 மணி முதல் இரவு 12 மணி வரையும் என தினமும் இரண்டு ஷிப்டுகளாக கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்படுகிது. குழந்தைகள் மற்றும் பெண்கள்பாதுகாப்பைஉறுதி செய்வது மற்றும் குற்ற செயல்களை முன்கூட்டியே தடுப்பது ஆகியவற்றை முக்கிய நோக்கமாக கொண்டு செயல்படுகிறோம். இதன் மூலம் பள்ளிகள், கல்லூரிகளுக்கு செல்லும் மாணவிகள் மற்றும் பணிகளுக்கு சென்று மீண்டும் வீடுகளுக்கு திரும்பும் பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். மேலும் 100, 1098 உள்பட கட்டணமில்லா தொலைபேசி எண்களில் அவசர உதவி கேட்டு பெண்களிடம் இருந்து வரும் அழைப்புகளை பெற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

இவ்வாறு அவர் கூறினார்.

### பஞ்சப்பள்ளியில்

# மக்கள் திட்ட முகாம் ஆட்சியர் எம் எல் ஏ பங்கேற்பு

தருமபுரி ஜூன் 12

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் பஞ்சப்பள்ளி கிராமத்தில் தருமபுரி மாவட்ட நிர்வாகம் மற்றும் வருவாய் & பேரிடர் மேலாண்மை துறை சார்பில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சியர் வே. சரவணன் தலைமையிலும், மாவட்ட வருவாய்அலுவலர் முன்னிலையில் நடைபெற்றது .

இந்த திட்ட முகாமில் பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர் கே.பி.அன்பழகன் கூறியதாவது. பாலக்கோடு சட்டமன்ற தொகுதி மக்களின் ஐம்பது ஆண்டு கால கோரிக்கையான ஆழியாளம் அணைக் கட்டிலிருந்து தூள் செட்டி ஏரிக்கு பாசன நீர் கொண்டு வருதல், எண்ணெய்க் கொள் புதூர் தும்பல அள்ளி அணைக்கு பாசன வசதி கொண்டு வருதல், ஜெர்த்தலாவ் ஏரியிலிருந்து புலிகரை ஏரிக்கு நீர் கொண்டு வருதல் போன்ற கோரிக்கைகளை காலதாமதம் இன்றி உடனடியாக பணிகளை மேற்கொண்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தினார். இந்த முகாமில் வருவாய் துறையின் சார்பில் 93 பேருக்கு ரூ. 61. 27 லட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டு மனை பட்டா, மின்னணு குடும்ப அட்டைகள் உள்ளிட்ட நலதிட்ட உதவிகள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 12 பேருக்கு ரூ.2. 11 லட்சம் மதிப்பீட்டில் சலவைப் பெட்டி, முஸ்லிம் பெண்களுக்கான நலத்திட்ட உதவிகள், சுகாதார துறையின் சார்பில் 10 பேருக்கு ரூ. 20 ஆயிரத்தில் கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகங்கள், மகளிர் திட்டம் சார்பில் 20 பேருக்கு ரூ 11.10 லட்சம் மதிப்பில் சிறு தொழில் தனிநபர் கடன் உதவிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் மொத்தம் 153 பேருக்கு ரூ 84.24 லட்சம் மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் சரவணன் வழங்கினார். இந்த முகாமில் மகளிர் திட்ட இயக்குனர் சுந்தர்ராஜன், உதவி ஆட்சியர் காயத்ரி சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் செல்வி, மாவட்ட வழங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் கோவிந்தன், உதவி ஆணையர் கோப்பு ,மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பண்டரிநாதன், தாசில்தார் அசோக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கோபி அருகே

# போதைப்பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழி விழிப்புணர்வு நிகழ்ச்சி



ஈரோடு ஜூன் 12

கோபி வெள்ளாங்கோவில் அரசு மேல் நிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் போதைப்பொருட்கள் ஒழிப்பு குறித்த உறுதிமொழி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உறுதி மொழியை மாவட்ட ஆட்சியர் வாசிக்க அதை மாணவ மாணவிகள் திரும்ப கூறி உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கூறும் போது

மாணவ, மாணவியர்கள் எவ்வித தவறான பழக்கத்திற்கும் ஆளாகாமல் வாழ்வில் முன்னேற வேண்டும். எனவே, உங்கள் வாழ்க்கை உங்கள் கையில் உள்ளது.

நம் வாழ்க்கை முக்கியம். நமது பெற்றோர்கள் முக்கியம் என நீங்கள் அனைவரும் நினைத்து கல்வி கற்பதில் கவனம் செலுத்தி வாழ்க்கையில், முன்னேற வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் போதைப் பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேச்சுப்போட்டி நடைபெற்றது.

### குமரி மாவட்டத்தில்

# இருசக்கர வாகன திருட்டு கும்பல் கைது

நாகர்கோவில், ஜூன்.12

கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவட்டார், தக்கலை மற்றும் குலசேகரம் உள்ளிட்ட பகுதிகளில் சமீப காலமாக இருசக்கர வாகனங்கள் திருடப்படுவதாக புகார்கள்எழுந்தன.இதையடுத்துமாவட்டகாவல்துறை உயர்அதிகாரிகளின்உத்தரவின்பேரில்தனிப்படையினர் தீவிரகண்காணிப்பு மற்றும் புலனாய்வில் ஈடுபட்டனர்.

இந்த விசாரணையில் தடிக்காரன்கோணம் பகுதியை சேர்ந்த பிரவின் ராஜ் (28) என்பவர் பல்வேறு பகுதிகளிலிருந்து வாகனங்களை திருடியது தெரிய வந்தது. திருடப்பட்ட வாகனங்களை பொன்மனை பகுதியை சேர்ந்த ஜெர்லின் (18) மற்றும் அருமை நல்லூர் பகுதியை சேர்ந்த கிறிஸ்டோபர் (48) ஆகியோரிடம் பிரபின் ராஜ ஒப்படைத்துள்ளார்.

கிழக்கம்பாகம் பகுதியில் கிறிஸ்டோபர் ஒரு பழைய இரும்புபொருட்கள்வாங்கும்கடைநடத்திவந்துள்ளார். இந்த கடையை மறைமுகமாக திருட்டு வாகனங்களை பிரிக்கும் மையமாக அவர்கள் பயன்படுத்தி வந்தனர். திருடப்பட்ட வாகனங்களை இந்த கடைக்கு கொண்டு வந்து பாகங்களாக பிரித்து, எடைக்கு விற்பனை செய்துள்ளனர். மேலும் சில வாகனங்களை போலி ஆவணங்கள் மூலம் பிற நபர்களுக்கு விற்பனை செய்து லாபம் சம்பாதித்து வந்ததும் விசாரணையில் தெரிய வந்தது.

இந்த நிலையில் இந்த சம்பவத்தில் தொடர்புடைய விபின் ராஜ், ஜெர்லின் மற்றும் கிறிஸ்டோபர் ஆகிய 3 பேரையும் போலீசார் கைது செய்தனர். இந்த கும்பல் மீது திருவட்டார் போலீஸ் நிலையத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன



### ஆம்பூர் அருகே வடபுதுப்பட்டில்

# அருள்மிகு ஸ்ரீ திருப்பதி கெங்கையம்மன் திருவிழா

ஆம்பூர், ஜூன்,12

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த வடபுதுப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஶ்ரீ திருப்பதி கெங்கையம்மன் திருக்கோயில் திருவிழா பக்தர்கள் திரளான பங்கேற்புடன் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

விழாவையொட்டி செவ்வாய்க்கிழமை ஸ்ரீ வரசித்தி விநாயகர், மாரியம்மன், பொன்னியம்மன், ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ பாட்டை சாரி அம்மன் மற்றும் ஸ்ரீ கெங்கையம்மன் உள்ளிட்ட அனைத்து மூலவர் சன்னிதிகளிலும் சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் அலங்காரங்கள் நடைபெற்றன. தொடர்ந்து ஸ்ரீ கெங்கையம்மனுக்கு கூழ் அமுது படைக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

புதன்கிழமை அதிகாலை ஸ்ரீ திருப்பதி கெங்கையம்மன்சிரசுதாரை, தப்பட்டை மற்றும் மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. இதில் பக்தர்கள் பொங்கல் வைத்து வழிபட்டதுடன், மாவிளக்கு எடுத்தும் நேர்த்திக்கடன் செலுத்தினர். மேலும், வடபுதுப்பட்டு சின்னத்தாய் நகர் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் சார்பில் 11ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு மகா அசைவ அன்னதானம் வழங்கப்பட்டது.

மாலை நேரத்தில் ஸ்ரீ திருப்பதி கெங்கையம்மனுக்கு அந்தரத்தில் பறந்து வந்து மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி பக்தர்களை பரவசப்படுத்தியது.

இரவு வடபுதுப்பட்டு விநாயகர் ஆலயத்தில் இருந்து சக்திகரகம் காளியம்மன் கோயில் வரை ஏராளமான பக்தர்கள் தீச்சட்டி ஏந்தி வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர். தொடர்ந்து திரைப்பட நடன நிகழ்ச்சிகள் மற்றும் வாணவேடிக்கை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

இந்நிகழ்ச்சிகளில் ஊர் பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



# ஈரோடு அருகே பேச்சு சிகிச்சை மையம்

ஈரோடு ஜூன் 12

ஈரோட்டை அடுத்த பள்ளி பாளையத்தில் ஆரா பிசியோதெரபி மற்றும் மறுவாழ்வு மையம் மற்றும் யுனைடெட் கேர் ஆக்குபேஷனல் தெரபி பேச்சு சிகிச்சை மையம் திறப்பு விழா

சண்முகா மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள ஆரா பிசியோதெரபி மறுவாழ்வு மையம் மற்றும் யுனைடெட் கேர் ஆக்குபேஷனல் தெரபி & பேச்சு சிகிச்சை மையத்தின் திறப்பு விழா நடைபெற்றது இதை சண்முகா மருத்துவமனை குழுமத்தின் நிறுவனர் அன்னக்கொடி திறந்து வைத்தார்

ஸ்ரீவெங்கடேஸ்வரா பிசியோதெரபி கல்லூரி முதல்வர் டாக்டர் நந்தகுமார் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

யுனைடெட் கேர் ஆக்குபேஷனல் தெரபி பேச்சு சிகிச்சை மையம் நிறுவனர் டாக்டர் கார்த்திகேயன் வரவேற்றார்.

இந்த மையத்தில் பக்கவாதம், முதுகுத் தண்டு காயம், மூளை காயம், செரிப்ரல் பால்சி, பார்கின்சன் நோய் உள்ளிட்ட நரம்பியல் மற்றும் எலும்பியல் பிரச்சினைகளுக்கான பிசியோதெரபி சேவைகள் வழங்கப்படுகின்றன. மேலும், குழந்தைகளின் வளர்ச்சி தாமதம், பேச்சுக் குறைபாடுகள், ஆட்டிசம், கற்றல் சிரமங்கள் மற்றும் விழுங்குதல் குறைபாடுகளுக்கான ஆக்குபேஷனல் தெரபி மற்றும் பேச்சு சிகிச்சை சேவைகளும் ஒருங்கிணைந்த முறையில் வழங்கப்படுகின்றன.

### களியக்காவிளை, தக்கலை பகுதிகளில்

# குட்கா விற்ற 2 பேர் கைது 24 கிலோ பறிமுதல்

நாகர்கோவில், ஜூன். 12

கன்னியாகுமரி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட போதை பொருட்களை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் உத்தரவின் பேரில் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு மற்றும் அதிரடி சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக களியக்காவிளை , தக்கலை பகுதிகளில் சட்ட விரோதமாக குட்கா விற்பனையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களியக்காவிளை பகுதியில் அரசால் தடை செய்யப்பட்டு குட்கா விற்பனை செய்யப்படுவதாக போலீசருக்கு தகவல் கிடைத்தது. இதனை அடுத்து போலீசார் தீவிர சோதனை நடத்திய போது ஒற்றாமரம் பகுதியை சேர்ந்த சாகுல் ஹமீது (72)என்பவர் வீட்டிலிருந்து 8.3 கிலோ குட்காவை போலீசார் பறிமுதல்செய்தனர்.ஷாகுல்ஹமீதுமீதுகளியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்துனர்.

இது போன்று தக்கலை மேக்காமண்டபம் பகுதியில் போலீசார் மேற்கொண்ட சோதனையில் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த பாலகிருஷ்ணன் (58) என்பவர் பிடிபட்டார். அவரிடம் இருந்து 15.5 கிலோ போதை புகையிலை பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக தக்கலை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மாவட்ட முழுவதும் கஞ்சா, குட்கா மற்றும் புகையிலை உள்ளிட்ட போதை பொருட்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த இரவு பகலாக போலீசார் சோதனைகள் மேற்கொண்டு வருகின்றனர். தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் விற்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல்துறை எச்சரித்து உள்ளது.




# சிறந்த சேவைக்கான விருது வழங்கும் விழா

ஈரோடு, ஜூன் 12

பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 324 C மாவட்டத்தின் 2024 2025 ஆம் ஆண்டின் சிறந்த சேவைக்கான விருது திருச்சியில் நடைபெற்றது.

விருதை கூட்டு மாவட்டத்தின் தலைவர் ராஜேஷ் முன்னிலையில் பன்னாட்டு இயக்குனர்,மகேஷ் தலைமையில்,முன்னாள் பன்னாட்டு இயக்குனர்தனபாலன் மற்றும் பன்னாட்டு இயக்குனர் ஒப்பிசைவு சீனிவாசன், மண்டலத்தலைவர் செந்தில்குமார்,நறுமலர் கருணாநிதி ஜி எல் டி ஒருங்கிணைப்பாளர் ரவிசங்கர்,ஜி இ டி செல்வகுமார்,மாவட்ட அமைச்சரவை செயலாளர் முத்துசாமி,மாவட்ட அமைச்சரவை பொருளாளர் சரவணன்,லியோ கோடினேட்டர் ஆனந்தகுமாரி,லியோ தலைவர் ஹரிஹரன்,சிறந்த சங்கத்தின் செயலாளர் ரமேஷ்,கோத்தகிரி சிறந்த சங்கத்தின் பொருளாளர் உடுமலைப் பேட்டை ஈஸ்ட் சிறந்த சங்கத்துக்கான விருது பல்லடம் சிறந்த சங்கத்துக்கான விருது திருப்பூர் சவுத் சிட்டி ஆகியோருக்கு சிறந்த தேவைக்கான விருதை வழங்கினார்.அருகில் முன்னாள் கூட்டு மாவட்ட தலைவர்கருணாநிதி மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



# வடக்குப் பேயங்குழி இரட்டைக்கரை கால்வாய் கலெக்டர் பிரதாப் ஆய்வு

நாகர்கோவில், ஜூன்.12

குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வடக்குப் பேயங்குழி இரட்டைக்கரை கால்வாயினை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:

விவசாயப் பணிகளுக்கு தடையின்றித் தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில், மாவட்டத்தில் உள்ள பல்வேறு நீர்நிலைகள் மற்றும் கால்வாய்களைத் தூர்வாரும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, வடக்குப் பேயங்குழி கிராமத்தின் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் இரட்டைக்கரை கால்வாயில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கால்வாயில் தண்ணீர் தங்குதடையின்றிச் சென்று கொண்டிருப்பதை நேரில் பார்வையிட்டதோடு, தூர்வாரப்பட்டதன் மூலம் நீரோட்டம் சீராக உள்ளதா என்பதையும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கால்வாயில் திறந்து விடப்படும் நீரானது, எவ்விதத் தடையுமின்றி பாசனப் பரப்பின் கடைமடைப் பகுதி வரை முழுமையாகச் சென்றடைவதை அலுவலர்கள் கட்டாயம் உறுதி செய்ய வேண்டும். நீர்வழிப் பாதையில் எங்கும் அடைப்புகளோ அல்லது ஆக்கிரமிப்புகளோ ஏற்படாத வண்ணம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமெனதுறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. என கலெக்டர் கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் நீர்வளத்துறை செயற்பொறியாளர் வசந்தி, உதவி செயற்பொறியாளர் கதிரவன், உதவிப் பொறியாளர், துறை அலுவலர்கள் உட்பட பலர் உள்ளார்கள்.

### சேலம் மாவட்டத்தில்

# தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

சேலம் ஜூன் 12

சேலம் மாவட்டத்தில் 19.06.2026 வெள்ளிக்கிழமை அன்று தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது.

சேலம் மாவட்டம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் பெண்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் வெள்ளிக்கிழமை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுகிறது. அதன்படி வருகின்ற 19ஆம் தேதி மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது. இந்த முகாமில் உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், ஜவுளி, வங்கி சேவைகள், காப்பீடு, மருத்துவம் மற்றும் கட்டுமானம் உள்ளிட்ட முக்கிய துறைகளை சார்ந்த முன்னணி வேலை அளிக்கும் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்ய உள்ளனர். சேலம் கோரி மேட்டில் அமைந்துள்ள மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறும் முகாமில் எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, 12ஆம் வகுப்பு, ஐ.டி.ஐ, டிப்ளமோ, பட்டப் படிப்பு, பொறியியல், செவிலியர், ஆசிரியர் மற்றும் தொழில் கல்வி போன்ற அனைத்து விதமான கல்வித் தகுதி உள்ளவர்களும்கலந்துகொண்டுபயன்பெறகேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்த முகாமில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து விண்ணப்பிக்கலாம் . முகாம் தொடர்பான விவரங்களுக்கு jobairmccsalem@gmail.

com என்ற மின்னஞ்சல் மூலமாகவும் 0427 2401750 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். காலி பணியிடங்களுக்கு தேர்வு செய்ய உள்ள தொழில் நிறுவனங்களும் சேலம் மாவட்டத்தை சேர்ந்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் அதிக எண்ணிக்கையில் இந்த முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு சேலம் மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் தெரிவித்துள்ளார்.




## சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படை

# தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 பேர் நியமனம்

தஞ்சாவூர் ஜூன் 12

தஞ்சாவூர் மாவட்டத்தில் சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப்படையில் ஓட்டு நர்கள் உள்பட 8 பேர் கொண்ட இரு அணிகள் நியமிக்கப்பட்டு ள்ளன.

பெண்களுக்கு எதிரான பாலியல் உள் ளிட்ட வன்கொடுமைகளை தடுப்பதற் காக தமிழகத்தில் சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை சென்னை யில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் தொடங்கி வைத்தார்

இதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு பிரிவிற்கு ஒரு காவல் உதவி ஆய்வாளர் ,2 காவலர்கள் ,1 ஓட்டுநர் வீதம் என இரு பிரிவுகளுக்கு மொத்தம் 8 பேர் நியமிக் கப் பட்டுள்ளனர் .இதில் ஒரு பிரிவு காலை 6 மணி முதல் பிற்பகல் 2:00 மணி வரையும், பிற்பகல் 2:00 மணி முதல் நள் ளிரவு 12:00 மணி வரை பணியில் ஈடுப டுவர்

இந்த அணியினர் மாவட்ட முழுவதும் ரோந்து பணி செய்வது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழ்வதாக தகவல் கிடைத்தவுடன் நிகழ்வு இடத்திற்கு விரைந்து செல்வது போன்ற பணிகள் மேற் கொள்வர் .மேலும் பெண்களுக்கு எதிரான குற்றங்களை கண்காணி த்து தடுப்பது ஏற்கெனவே பெண் களுக்கு எதிரான குற்றங்கள் நிகழ்ந்த இடங்கள், பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத பகுதி என கண்டறியப்பட்ட இடங்க ளில் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், பள்ளி, கல்லூரி களில் விழிப்புணர்வு ஏற்படுத்து வது போன்ற பணிகளில் ஈடுபடுவர்

இது தொடர்பாக 8 பேரும் சென்னை யில் ஒரு வாரம் பயிற்சி மேற்கொள்ளப் பட்டு, தஞ்சாவூருக்கு திரும்பினர்.

இவர்களுக்கு மாவட்ட காவல் அலுவ லகத்தில் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் சுந்தர வதனம் வாழ்த்து தெரிவித் தார் அப்போது வல்லம் காவல் துணை கண்காணிப்பாளர் காயத்ரி உடன் இருந் தார்

# குமரியில் தென்மேற்கு பருவ மழை தீவிரம்

## கொட்டி தீர்த்த கனமழையால் தொழில்கள் முடங்கின

நாகர்கோவில், ஜூன். 12

கன்னியாகுமரி மாவட்டத்தில் தற் போது தென்மேற்கு பருவமழை தொடங் கியுள்ளது. மாவட்டம் முழுவதும் நேற்று முன்தினம் இரவு முதல் விடிய விடிய கனமழை கொட்டியது. நேற்று குமரி மாவட்டத்திற்கு கன மழைக்கான மஞ் சள் எச்சரிக்கை விடுவிக்கப்பட்டிருந்தது. இதை அடுத்து காலை முதலே மாவட் டம் முழுவதும் பரவலாக மழை பெய் தது.

நாகர்கோவில், தக்கலை, மார்த்தாண் டம் உள்ளிட்ட பகுதிகளில் மழை கொட் டியதால் பள்ளி செல்லும் மாணவ மாண விகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர். சில மாணவிகள் மழையிலிருந்து தப் பிக்க குடை பிடித்தவாறும், ரெயின் கோட்டு அணிந்தும் பள்ளிக்கு சென்று வந்தனர்.

சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. கன்னியாகுமரி பகுதியில் காலை முதலே கனமழை பெய்ததால் சுற் றுலாப் பணிகள் தங்களது விடுதியில் முடங்கி கிடந்தனர். இதனால் கடற்கரை பகுதி வெறிச்சோடி காணப்பட்டது. மேலும் அஞ்சுகிராமம், மயிலாடி, கொட் டாரம், சுசீந்திரம் ஆகிய பகுதிகளிலும் நேற்று கனமழை பெய்தது.

சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழை கொட்டி தீர்த்தது.

குமரி மலையோரப் பகுதி பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணை பகுதிக ளில் கனமழை பெய்து வருவதால் அணைகளுக்கு வரக்கூடிய நீர் வரத்து அதிகரித்து உள்ளது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் நேற்று ஒரே நாளில் சுமார் மூன்று அடி உயர்ந்து உள் ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மாவட்டம் முழுவதும் ஆறுகளில், கால் வாயில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகி றது. பாசன குளங்கள் வேகமாக நிரப்பு வதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

குலசேகரம், தடிக்காரங்கோணம், கீரிப்பாறை போன்ற மலையோரப் பகு தியில் ரப்பர் தோட்டங்களில் மழை கார ணமாக ரப்பர் உற்பத்தி பாதிக்கப்பட்டுள் ளது. மேலும் தோவாளை, செண்பகரா மன்புதூர், மயிலாடி போன்ற பகுதியில் உள்ள செங்கல் சூளைகளிலும் தொடர் மழை காரணமாக செங்கல் உற்பத்தியும் முடங்கியது.

# தென் மாநிலங்களின் நிலையான எரிசக்தி அமைப்பின் (என்.எஸ்.இ.எஃப் .ஐ) தொடக்க விழா

சென்னை ஜூன்12

தென்னிந்தியா முழுவதும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிக்கும் முயற்சிகளை விரைவுபடுத்த என்.எஸ்.இ.எஃப் .ஐ (NSEFI ) சென்னையில் தனது தென் மண் டலக் குழுவை அமைத்துள்ளது.

இதற்கான தொடக்க விழா சென்னையில் நடைபெற்றது. இதில் தூய எரிசக்தித் துறையைச் சேர்ந்த முக் கிய பிரமுகர்கள் ஒன்றிணைந்தனர்.

இந்தியாவின் தூய எரிசக்தி முன்னெ டுப்புகளை வழி நடத்துவதில் ஒரு தசாப்தத்திற்கும் மேலான , புது தில்லி யைத் தலைமையிடமாகக் கொண்ட பொது அறக்கட்டளையாக செயல்படும் முன்னணி எரிசக்தி கொள்கை மற்றும் ஆதரவு அமைப்பே 'நேஷனல் சோலார் எனர்ஜி ஃபெடரேஷன் ஆஃப் இந்தியா' (NSEFI) ஆகும். 2013ல் என்.எஸ் இ.எஃப் .ஐ யை (NSEFI) உருவாக்கத் துறையின் முக்கியப் பிரமுகர்களை ஒன்றிணைப்ப தில் மறைந்த என் . எஸ் .இ. எஃப். ஐ முன்னாள் தலைவர், பிரணவ் ஆர். மேத்தா, ஸ்வெலெக்ட் எனர்ஜி சிஸ் டம்ஸ் துணைத் தலைவர் மற்றும் முழு நேர

இயக்குநர், ஆர். செல்லப்பன் மற்றும் ஹீரோ ஃபியூச்சர்ஸ் சி. இ.ஓ சுனில் ஜெயின் ஆகியோர் முக்கியப் பங்காற் றினர்.

புதிதாக நிறுவப்பட்ட துணை அமைப் பான என்.எஸ் இ.எஃப் .ஐ என்கிற நிலையானஎரிசக்தித்துறைகூட்டமைப்பு மூலம், சென்னையில் தலைமையிடமா கக் கொண்ட தனது தெற்கு மண்டலக் குழுவின் அதிகாரப்பூர்வத் தொடக் கத்தை அறிவித்தது. இது தமிழ்நாடு, கர் நாடகா, தெலுங்கானா, ஆந்திரப் பிரதே சம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்ப தற்கான முயற்சிகளை முன்னெடுப்பதில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகிறது.

இதில் மத்திய மற்றும் மாநில அரசுக ளின் உயர்மட்ட பிரமுகர்கள் இதில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

தென்னிந்தியாவின் ஐந்து மாநிலங்களி லும் சூரிய ஆற்றல், காற்றாலை ஆற்றல், ஆற்றல் சேமிப்பு, பசுமை ஹைட்ரஜன் மற்றும் பிற வளர்ந்து வரும் தூய எரிசக்தி தொழில்நுட்பங்கள் தொடர்பான கொள்கை ஆதரவு மற்றும் விழிப்புண ர்வை ஏற்படுத்துவதோடு, மாநில அரசு களுக்கு விரிவான அறிவுசார் ஆதரவு மற் றும் வழக்கமான தொழில்சார் கருத்துக் களை வழங்குவதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

# புதுக்கடை: எம் சேண்ட் கடத்திய டிப்பர் வாகனம் பறிமுதல்

புதுக்கடை, ஜூன்.12

புதுக்கடை அருகே உள்ள முஞ்சிறை சுற்று வட்டார பகுதியில் இருந்து கனிம வளங்கள் கடத்துவதாக புதுக்கடை போலீ சாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதை அடுத்து புதுக்கடை போலீஸ் சப்இன்ஸ் பெக்டர் ஜான்ரோஸ் தலைமையிலான போலீசார் அந்த பகுதியில் ரோந்து சென்ற னர். அள்ளம் என்ற பகுதியில் வைத்து டிப் பர் வாகனத்தில் சுமார் 2 யூனிட் எம் சான்ட் உடன் வாகனம் ஒன்று வந்துள்ளது. போலீ சாரை கண்டவுடன் வாகனத்தை நிறுத்தி விட்டு டிரைவர் தப்பி ஓடி விட்டார். இதை எடுத்து வாகனத்தை சோதித்த போது அதில் எம் சாண்டிற்கான எந்த அனும தியோ, உரிமமோ இல்லாமல் திருட்டுத்த னமாக கடத்துவது தெரிய வந்தது இதைய டுத்து வாகனத்தை எம் சாண்டுடன் பறிமு தல் செய்து போலீஸ் நிலையம் கொண்டு வந்தனர். இது குறித்து புதுக்கடை போலீ சார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வரு கின்றனர்.

## காரிமங்கலம் அருகே

# தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் விற்பனை செய்த மளிகை கடைக்கு ரூ.50,000 அபராதம்

தருமபுரி ஜூன் 12

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் மற்றும் சுற்று வட் டார பகுதிகளில் அரசால் தடை செய்யப்பட்ட பொருட் கள் சட்ட விரோதமாக விற்பனை செய்யப்படுவதாக வந்த புகாரின் அடிப்படையில் மாவட்ட உணவு பாது காப்புத்துறை அலுவலர் கைலாஷ் குமார் மேற்பார்வை யில் வட்டார உணவு பாதுகாப்புத் துறை அலுவலர் திருப்பதி மற்றும் அதிகாரிகள் பாலக்கோடு ரோட்டில் உள்ள மளிகை மற்றும் பீடா கடைகளில் சோதனை மேற்கொண்டனர். அப்போது மளிகை கடை ஒன்றில் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் விற்பனை செய்வது தெரிய வந்தது. இதை அடுத்து குட்கா பொருட் களை பறிமுதல் செய்த உணவு பாதுகாப்பு துறை அலு வலர்கள் கடை உரிமையாளருக்கு ரூ. 50,000 அபராத விதித்து கடை முப்பது நாட்களுக்கு செயல்பட தடை விதித்தனர்.

## புதுக்கடை அருகே

# நர்சிங் மாணவி திடீர் மாயம் தாயார் போலீசில் புகார்

புதுக்கடை, ஜூன். 12

புதுக்கடை அருகே உள்ள முஞ்சிறை பகுதியை சேர்ந்தவர் அஜயன் மனைவி சந்தியா மோகன் (43). அஜயன் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இந்த தம்பதியருக்கு சௌமியா (19), அருண் (17) என்ற இரண்டு பிள்ளைகள் உள்ளனர். இதில் சௌமியா பிஎஸ்சி நர்சிங் படித்து வந்தார். ஆறு மாதம் பிஎஸ்சி நர்சிங் படிக்க கல்லூரி சென்று விட்டு தற்போது வீட்டில் இருந்து வருகிறார். இந்த நிலையில் நேற்று முன்தினம் வீட்டில் இருந்த சௌமியாவை திடீரென காணவில்லை. உறவினர்கள் பல்வேறு இடங்களில் தேடி பார்த்தும், மாணவி குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதையடுத்து தனது மாயமான மகளை கண்டுபிடித்து தருமாறு சந்தியா மோகன் புதுக்கடை போலீசில் புகார் அளித்தார். போலீசார் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## இனயம் அருகே

# பஸ் படிக்கட்டில் இருந்து தவறி விழுந்த முதியவர் படுகாயம்

புதுக்கடை, ஜூன். 12

புதுக்கடை அருகே உள்ள இனயம் புத்தன்துறை பகுதியை சேர்ந்தவர் இருதயதாசன் (80). இவர் நேற்று முன்தினம் இனயம் புத்தன்துறை புனித அந்தோனியார் மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள பஸ் நிறுத்தத்திலிருந்து பஸ்ஸில் ஏறி உள்ளார். பஸ்ஸில் ஏறும் போது ஓட்டுநர் பஸ்ஸை கவனக்குறைவாக வேகமாக இயக்கியதில் இருதயதாசன் படிக்கட்டில் இருந்து தவறி கீழே விழுந்து படுகாயம் அடைந்தார். உடனடியாக அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு நாகர்கோவில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்து இருதயதாசன் மகள் றினி தாஸ் என்பவர் புதுக்கடை போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் பஸ் ஓட்டுனர் பைஜு, கண்டக்டர் தினேஷ் குமார் ஆகியோர் மீது புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்

## குமரி மாவட்டத்தில்

# பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய 'சிங்கப்பெண்' சிறப்பு படையினர்



நாகர்கோவில், ஜூன்.12

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் வழிகாட்டுதலின் பேரில் மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் 'சிங்கப்பெண்' சிறப்பு அதிரடிபடை யினர் செயல்பட்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, பொது மக்கள் அதிகம் கூடும் முக்கியப் பகுதியான பேருந்து நிலையங்களில் இந்தச் சிறப்புப் படையினர் பொதுமக்கள், பெண் பயணிகள், மற்றும் மாணவிகளிடம் நேரடியாகப் பேசி விழிப்புணர்வு மற்றும் கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி நடக்கும் குற்றங்களைத் தடுப்பது குறித்தும் மேலும் பெண்களுக்கு பாதுகாப்பான உணர்வையும் ஏற்படுத்தினர்.

இந்த சிங்க பெண் படை மூலம் பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இந்த அதிரடிப்படையினர் தீவிர ரோந்துப் பணிகளை மேற்கொள்வார்கள். இது பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் குற்றங்களைத் தடுக்க உதவுகிறது.

பெண்களிடமிருந்து வரும் அவசர கால அழைப்புகள் (100/1091) மற்றும் புகார்களுக்கு மிக விரைவாகச் சென்று நடவடிக்கை எடுப்பதே இந்தப் படையின் முதன்மைப் பணியாகும்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், கடத்தல் முயற்சிகள் மற்றும் பொது இடங்களில் நடக்கும் பாலியல் அத்துமீறல்களை முன்கூட்டியே கண்டறிந்து தடுக்கும் பணிகளில் இப்படை ஈடுபடுகிறது. கன்னியாகுமரி மாவட்ட காவல் துறையின் சிங்கப்பெண் அதிரடிப்படை திட்டமானது பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

## விளாத்திகுளம் அருகே

# முறையான குடிநீர் வழங்காததை கண்டித்து ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிட்டு காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்ட கிராம பொதுமக்கள்



விளாத்திகுளம் ஜூன் 12.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள கவுண்டன்பட்டி கிராமத் தில் கடந்த ஓராண்டுகளுக்கு மேலாக முறையான குடிநீர் இல்லாததால் அப்ப குதி மக்கள் பெரும் சிரமத்தை சந்தித்து வந்தனர், மேலும் அக்கிராமத்தில் உள்ள 6 அடி பம்புகள் பழுதான நிலையில் தற் போது வரை இருந்து வருகிறது அந்த அடி பம்புகளை சரி செய்யக்கோரியும் முறையான குடிநீர் வழங்க கோரியும், பலமுறை கிராம பஞ்சாயத்து செயல் அலுவலரிடம் புகார் அளித்தும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்காத தால், கவுண்டம்பட்டி கிராமத்தை சேர்ந்த பெண்கள், ஆண்கள் என 100 க்கும் மேற்பட்டோர் புதூர் ஊராட்சி ஒன் றிய அலுவலகத்தை முற்றுகையிட்டு, பல மணி நேரம் காத்திருப்பு போராட்டத் தில் ஈடுபட்டனர்.

இதனைத்தொடர்ந்து வட்டார வளர்ச்சி அலுவலர் கவுண்டன்பட்டி கிராமத்தில் முறையான குடிநீர் வழங்க ஏற்பாடு செய் யப்படும் என உறுதியளித்ததை தொடர்ந்து அக்கிரமம் மக்கள் அங்கி ருந்து கலைந்து சென்றனர்.

# திருவனந்தபுரம் மங்களூர் ரயில் கன்னியாகுமரி வரை நீட்டிக்கப்படுமா? பயணிகள் கோரிக்கை

நாகர்கோவில், ஜூன்.12

கன்னியாகுமரி மிகவும் பிரசித்தி பெற்ற ஆன்மீக சுற்றுலா தலம் ஆகும். கன்னியாகுமரியில் கடலில் கண்ணாடி பாலம் அமைக்கப்பட்ட பிறகு அதிக அளவில் சுற்றுலா பயணிகள் குறிப்பாக கோவா, மங்களூர், கேரளாவிலிருந்து வருகை தருகிறார்கள். கர்நாடக அரசு ஆன்மீக சுற்றுலா திட்டத்தை அறிமுகப் படுத்தி கர்நாடகாவில் கடற்கரை பகுதிக ளில் இருந்து கன்னியாகுமரியிலிருந்து சுற்றுலா திட்டத்தை நிதி உதவியுடன் இயக்கியது குறிப்பிடத்தக்கது.

கன்னியாகுமரி மாவட்ட பயணிகள் திருவனந்தபுரம் மங்களூர் எக்ஸ்பிரஸ் ரயிலை கன்னியாகுமரி அல்லது நாகர் கோவில் வரை நீட்டிப்பு செய்ய வேண் டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். திருவனந்தபுரத்தில் இருந்து மங்களூ ருக்கு தற்போது மூன்று தினசரி இரவு நேர ரயில்கள் இயக்கப்படுகின்றன. இவற் றில் ஒரு ரயிலை திருவனந்தபுரம் மங்க ளூர் ரயிலை கன்னியாகுமரி வரை நீட் டிப்பது கேரள பயணிகளுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது,

1989ம் ஆண்டு ரயில்வே பட்ஜெட் விவாதத்தில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டென்னிஸ், கன்னியாகுமரி யில் இருந்து மங்களூருக்கு தினசரி இரவு நேர ரயில் இயக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். ஆனால், 35 ஆண் டுகளாக இந்த கோரிக்கை நிறைவேற வில்லை. எனவே திருவனந்தபுரம் மங் களூர் எக்ஸ்பிரஸ் ரயிலை கன்னியாகு மரி அல்லது நாகர்கோவில் வரை நீட் டிக்க வேண்டும். இது கன்னியாகுமரி மாவட்ட பயணிகளின் தேவைகளை பூர்த்திசெய்யும்.கன்னியாகுமரிமாவட்ட பயணிகளின் நீண்ட கால கோரிக்கை யான மங்களூருக்கு தினசரி இரவு நேர ரயில் வசதியை வழங்குவது, பயணிகள், மாணவர்கள், சுற்றுலாப் பயணிகள் மற் றும் பக்தர்கள் பயணத்தை எளிதாக்கும். திருவனந்தபு ரம் மங்களூர் எக்ஸ்பிரஸ் ரயிலை நீட்டிப்பது இந்த பிரச்சனைக்கு உடனடி தீர்வாக அமையும். என குமரி மாவட்ட ரயில் பயணிகள் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

## தேனி மாவட்டம் கெங்குவார்பட்டியில்

# இயக்குநர் இமயம் பாரதிராஜாவுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அஞ்சலி



தேனி, ஜூன் . 12

தேனி மாவட்டம் கெங்குவார்பட்டி காட்ரோடு பகுதியில் அமைந்துள்ள இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர் கள், உடல்நலக்குறைவால் காலமானார் அவரின் உடலுக்கு (11.06.2026) தமிழ் நாடு அரசின் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. இரா. வைத்திநாதன், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத் தினார்.

தமிழ் திரைப்பட உலகில் தனித்துவ மான இயக்குநராக திகழ்ந்த பாரதிராஜா, கிராமிய வாழ்க்கை, பண்பாடு மற்றும் மனித உணர்வுகளை இயல்பாக திரைப் படங்களில் பதிவு செய்து தமிழ் சினிமா விற்கு புதிய அடையாளத்தை உருவாக் கியவர். அவரது மறைவு திரையுலகி ற்கும், ரசிகர்களுக்கும் ஈடுசெய்ய முடி யாத இழப்பாகக் கருதப்படுகிறது.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் சார் பில் மாவட்ட ஆட்சித்தலைவர் அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். அஞ்சலி நிகழ் வில் அரசு அதிகாரிகள், பொதுமக்கள், ரசிகர்கள் மற்றும் திரையுலகைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டு தங்களது இறுதி மரியாதையை செலுத்தினர். "மண்ணின் மணத்தை திரையில் கொண்டு வந்த மகத்தான கலைஞருக்கு தமிழகம் என்றும் நன்றியுடன் இருக்கும்" என பொதுமக்கள் மற்றும் ரசிகர்கள் அஞ் சலி செலுத்தினர்.




செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டத்திற்குட்பட்ட தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில், மக்கள் குறை தீர்க்கும் ஜமாபந்தி நடைபெற்றது. வருவாய் தீர்ப்பாயம் 1435 காண பசலி 9.6. 2026 முதல் 17.06.2026 நடைபெற்று வருகிறது, வருவாய் தீர்ப்பாய அலுவலர் தாம்பரம் மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சொ.வெங்கடாசலம் பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்து மனுக்களாக பெற்றுக்கொண்டு அதற்கான நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். உடன் தாம்பரம் வட்டாட்சியர் நடராஜன், தலைமை நில அளவர் வெங்கடேசன், உடன் இருந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.